DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 26.02.2026

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.14/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.5 |
| Name | : | நாகராஜ் |
| Father Name | : | ராமன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E.Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 26.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்).**
**<u>விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(12.03.P.M):–</u>**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், கொளத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 22.03.2024–ம் தேதியன்று ஏற்காடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது இரவு 09.00 மணிக்கு நிலைய அலுவலலில் இருந்த காவல் உதவி ஆய்வாளர் அந்தோணி மைக்கேல் அவர்களிடம் ஏற்காடு வட்டம், டேங்பாடி, பிளியூர் கிராமத்தை சேர்ந்த குப்பன் என்பவரின் மகன் ராமசந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று ஏற்காடு காவல் நிலைய குற்ற எண்.57/2024, ச/பி. 279, 337, 304(A) இதச–வின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அன்றைய தினமே சம்பவ இடத்தை பார்வையிட்டுள்ளார் என்றும், போதிய சூரிய வெளிச்சம் இல்லாததால் மறுநாள் 23.03.2024–ம் தேதி காலை சுமார் 06.30 மணிக்கு சம்பவ இடமான ஏற்காடு – பிளியூர் ரோட்டில் மஞ்சக்குட்டை கிராமத்திற்கு அருகே உள்ள கிரேக் மோர் சர்ஜ் கேட்டின் முன்பு சாட்சிகள் ரவிச்சந்திரன், குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு அன்றைய தினமே காலை 09.00 மணிக்கு ஏற்காடு அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் இவ்வழக்கில் இறந்து போன நபரான தட்சணாமூர்த்தி(22) என்பவரின் பிரேதத்தை சவகிடங்கு முன்பு வைத்து சாட்சிகள் ராமசந்திரன், அபிமன்னன், சுந்தர்ராஜன், தனபால், ராமர் ஆகியோர் முன்னிலையிலும், பஞ்சாயத்து சாட்சிகள் முன்னிலையிலும் சம்மன் சார்பு செய்து பிரேத விசாரணை காலை 09.00 மணி முதல் 11.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டார். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் இறப்பின் உன்மை காரணம் அறியும் பொருட்டு ஏற்காடு காவல் நிலைய காவலர் மணிகண்டன் என்பவர் மூலம் பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பியுள்ளார். அன்றைய தினமே பிரேத பரிசோதனை முடிக்கப்பட்டது. காவல் உதவி ஆய்வாளர் முதல் விசாரணை முடித்து வைத்தார். இவ்வழக்கினை 07.06.2024–ம் தேதி நான் மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்றும் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் விசாரணை செய்த சாட்சிகளை விசாரணை செய்ததில் முதல் விசாரணையில் சொன்னது போலவே என்னிடமும் சொன்னதால் நான் மறுவாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரியை காவல் நிலையம் முன்பு வைத்து கைது செய்து, கைது செய்த தகவலை உறவினர்களுக்கு தெரிவித்தும், பின்பு எதிரியை

தக்க பிணையில் விடுவித்தேன். அன்றைய தினமே வழக்கில் சம்மந்தப்பட்ட விபத்து வாகனங்களான TN 54 Q 4887 HONDA SHINE எதிரியின் வாகனம் மற்றும் வாதியின் வாகனம் TN 54 M 2138 HERO SPELNDER PLUS மேற்படி இரண்டு இருசக்கர வாகனங்களையும் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை பெறவேண்டு மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். **மோட்டர் வாகன அறிக்கைகள் அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிறகு அன்றைய தினமே இவ்வழக்கில் காயமடைந்த மனோஜ் என்பவரையும் எதிரி சூசைராஜ் என்பவரின் மனைவியுமான காயமடைந்த மார்கிரேட் ராணி என்பவரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 18.07.2024-ம் தேதி விபத்து வாகனங்களில் ஆய்வறிக்கையை பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.மாலதி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி மார்கிரேட் ராணி மற்றும் மனோஜிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.குமார் செல்வம் அவர்களை சந்தித்து காயச்சான்று பெற்று அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த மனோஜ் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.9 ஆகவும், மார்கிரேட் ராணி என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திருமதி.கவிபூர்ணிமா அவர்களை சந்தித்து பிரேத பரிசோதனை சான்று பெற்று அவரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் பிரேத பரிசோதனை அலுவலக்கு சென்ற காவலர் திரு.மணிகண்டன் அவர்களையும் இவ்வழக்கில் முதல் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் அவர்களையும் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயமடைந்த மனோஜ் என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்பதால் காயமடைந்த

மார்கிரேட் ராணி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்தவர் காயச்சான்றிழ் குறிப்பிட்டு அபிபிராயம் செய்ததால் அன்றைய தினமே வழக்கில் சட்டபிரிவுகள் 279, 337, 304(A) IPC–லிருந்து 279, 337, 338, 304(A) IPC ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் வழக்கில் அனைத்து விசாரணைகளையும் முடித்து எதிரி சூசைராஜ் மீது குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. குற்ற சம்பவ தேதி 22.03.2024–ம் தேதி 21.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், தட்டச்சு பிழையாகும். முதல் தகவல் அறிக்கையில் சாட்சிகள் வாக்குமூலத்தில் 22.03.2024 மாலை 06.00 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் சம்பவம் பற்றி கேள்விபட்ட சாட்சி என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தில் இறந்துபோன தட்சணாமூர்த்தி மற்றும் காயமடைந்த அவரது தம்பி மனோஜ் ஆகியோர் தலைகவசம் அணித்தே இருசக்கர வாகனத்தை இயக்கினர் என்றால் மேற்படி சங்கதி குறிப்பிட்டு விசாரணை செய்யப்படவில்லை.

2. விபத்தில் இறந்துபோன வாகனத்தை ஓட்டிய தட்சணாமூர்த்தி என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. TN 54 M 2138 என்ற வாகனத்தின் உரிமம் மற்றும் காப்பீடு ஆகியவை கைப்பற்றி வழக்கின் ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யவில்லை. TN 54 M 2138 என்ற வாகனம் தட்சணாமூர்த்தியின் பெயரில் இல்லை என்றால் சரிதான், வழக்கின் புகார்தாரரும், தட்சணாமூர்த்தியின் தந்தையுமான ராமசந்திரன் பெயரில் உள்ளது. விபத்து நடந்து பகுதி வளைவாகவும், பள்ளமாகவும் உள்ளது என்றால் சரியல்ல, நேராக இருக்கும். எதிரி மற்றும் அவரது மனைவி முன்னால் சென்றுகொண்டிருக்க பின்னால் வந்த TN 54 M 2138 என்ற வாகனத்தினை தட்சணாமூர்த்தி ஓட்டிவந்துதான்

எதிரியின் வாகனத்தின் மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல, எதிரி முன்னால் சென்றபோது எவ்வித சமிக்ஞை  செய்யாமல் திடிரேன வாகனத்தினை வலது பக்கமாக திருப்பியதால் ஏற்பட்ட விபத்து ஆகும்.

3. மேற்படி விபத்தினால் எதிரியும், எதிரியின் மனைவியும் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன தட்சணாமூர்த்தி இருசக்கர வாகனத்தினை ஓட்ட தெரியாமல் ஓட்டி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, வழக்கில் இறந்துபோன தட்சணாமூர்த்தி என்பவர் 25.07.2023–ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு சென்று அவரின் ஒப்புதலின் படி ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளார். விபத்து நஷ்ட ஈடு வேண்டி பொய்யான புகார் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சம்பவ இடம் சென்று விசாரணை செய்யவில்லை என்றும், ஆவணங்கள் அனைத்தும் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.36.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.02.26 12:45:25 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.